# ஒரு பார்வை - பகுதி 1

**"அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். நிச்சயமாக அவன்தான் மன்னிப்பவனாக இருக்கின்றான்" என்று நபியே நீர் கூறுவீராக! நியாயத்தீர்ப்பு நாளின்போது, பூமிக்கு என்ன நடக்கும், ஸூர் (எக்காளம்) ஊதும்போது என்ன நடக்கும், மனிதனின் விசாரணையின்போது நடக்கும் காட்சிகள் ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன.**

# தராவிஹ் - 20: (ரக்அத் 1 முதல் 4)

## ஸூரா - 39, அல்ஜுமர்; வசனம்: 32 - 70; பிரிவு: 4 - 7

1. **(நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். நம்பிக்கையுடன் சார்ந்திருப்போர், அவனையே சார்ந்திருப்பர்". (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 4)**

2. **மனிதனுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் அல்லாஹ்வை அழைக்கிறான். பிறகு அல்லாஹ், தன் அருட்கொடைகளிலிருந்து ஏதேனும் வழங்கினால், "என்னுடைய அறிவாற்றலால்தான் எனக்கு இது வழங்கப்பட்டுள்ளது" எனக் கூறுகின்றான். விஷயம் அப்படியல்ல. இது ஒரு சோதனை. ஆனாலும் அவர்களில் பெரும்பாலானோர் இதனை அறிய மாட்டார்கள். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 5)**

3. **"தமக்குத் தாமே அநீதியிழைத்து, வரம்பு மீறி நடந்த என் அடியார்களே! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். நிச்சயமாக அவன்தான் மன்னிப்பவனும், கிருபையாளனுமாக இருக்கின்றான்" என்று நபியே நீர் கூறுவீராக! (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 6)**

4. அல்லாஹ்வின்மீது பொய் உரைத்தவர்களுடைய முகங்கள் கியாமத் நாளில் கருப்பாகி விடும். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 6)

5. மாறாக, அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொண்டவர்களுக்கு அல்லாஹ் வெற்றியளித்து, அவர்களை ஈடேற்றம் பெறச் செய்வான். எவ்விதக் கெடுதலும் அவர்களைத் தீண்டாது. மேலும் அவர்கள் கவலை அடையவும் மாட்டார்கள். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 6)

6. கியாமத் நாளில், பூமி முழுவதும் அல்லாஹ்வின் கைப்பிடிக்குள் இருக்கும். வானங்கள் அனைத்தும் அவனது வலக்கரத்தில் சுருட்டப்பட்டிருக்கும். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 7)

7. மறுமை நாளில் சூர் ஊதப்படும். அப்போது அல்லாஹ் நாடியவர்களைத் தவிர, வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்கள் யாவரும் மூர்ச்சையாகி மடிந்து விடுவார்கள். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 7)

8. பிறகு இரண்டாவது தடவை சூர் ஊதப்படும். அப்போது அவர்கள் எழுந்து அங்குமிங்கும் பார்ப்பவர்களாக நிற்பார்கள். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 7)

9. (மஹ்ஷர் மைதானம்) பூமி தனது இறைவனின் ஒளியால் பிரகாசிக்கும். பதிவேட்டினை கொண்டு வந்து திறக்கப்படும். நபிமார்களையும், சாட்சியாளர்களையும் கொண்டு வந்து மக்களுக்கு மத்தியில் நீதமாக தீர்ப்பு வழங்கப்படும். அவர்களுக்கு அநீதமிழைக்கப்படாது. (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 7)

10. ஒவ்வொரு மனிதனும் தான் செய்ததற்குரிய கூலியை முழுமையாகப் பெறுவான். மேலும் அல்லாஹ் அவர்கள் செய்தவற்றை நன்கறிவான். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 7)

## ஒரு பார்வை - பகுதி 2

**காஃபிர்கள், கூட்டம் கூட்டமாக நரகத்திற்கு தள்ளப்படுவதும், அதன் வாயில்களில் நடக்கும் உரையாடல்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. விசுவாசிகள் குழுக்களாக சுவர்க்கம் நோக்கி அழைத்துச் செல்லப்படுவதும் மற்றும் அதன் வாயிலில் அவர்கள் ஸலாமுடன் வரவேற்கப்படுவதும் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அர்ஷைச் சுமக்கும் வானவர்கள், ஈமான் கொண்டு, அல்லாஹ்விடம் மன்னிப்பு தேடும் மனிதர்களுக்காகப் பிரார்த்திக்கிறார்கள். நியாயத்தீர்ப்பு நாளின்போது, காஃபிர்கள் நரகத்தை விட்டு வெளியேற வழிதேடி கெஞ்சுவார்கள். மூஸா (அலை) அவர்கள் ஃபிர்அவ்னை அல்லாஹ்வின் பாதையில் அழைக்க, அவன் கோபம் கொண்டு மூஸா (அலை) அவர்களை கொலை செய்வேன் என மிரட்டினான்.**

## தராவிஹ் - 20: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 39, அல்ஜூமர்; வசனம்: 71- 75; பிரிவு: 8

1. **தீர்ப்பு வழங்கப்பட்ட பின் காஃபிர்கள், கூட்டம் கூட்டமாக நரகிற்கு இழுத்துக் கொண்டு வரப்படுவார்கள். (ஸூரா - அல்ஜூமர்; பிரிவு: 8)**

2. **நரகத்தின் வாயிலில் அதன் காவலாளிகள், “உங்களிடம் இறைத்தூதர் வரவில்லையா? இறைவனின் வசனங்களை ஓதிக்காட்டப்படவில்லையா? இந்த நாளை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்குமென்று உங்களை அவர்கள் எச்சரிக்கவில்லையா”?” என்று கேட்பார்கள். (ஸூரா - அல்ஜூமர்; பிரிவு: 8)**

3. **அதற்கு அவர்கள், “ஆம், (எச்சரித்தார்கள்) ஆயினும் இறைமறுப்பாளர்களான எங்களுக்கு வேதனை பற்றிய வாக்கு உண்மையாகி விட்டது” என்று பதில் சொல்வார்கள். நரகத்தின் காவலாளிகள், “நரக வாசலில் நுழைந்து, அதிலேயே**

நிரந்தரமாக தங்கி விடுங்கள்” எனக் கூறுவார்கள். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 8)

4. யார் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொண்டனரோ, அவர்கள் கூட்டம் கூட்டமாக சுவனத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 8)

5. சுவர்க்க வாசலில் அதன் காவலாளிகள், “உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும். நீங்கள் மனநிறைவு பெற்று விட்டீர்கள். இப்போது சுவனத்தில் நுழைந்து, அங்கேயே நிரந்தரமாக தங்கி விடுங்கள்” என்று கூறுவர். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 8)

6. (நபியே! அப்போது) வானவர்கள் அல்லாஹ்வினுடைய அர்ஷைச் சுற்றி நின்று அவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருப்பதை நீர் காண்பீர். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 8)

7. மக்களுக்கு மத்தியில் நியாயத் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. அகிலத்தை படைத்து பரிபாலிக்கின்ற அல்லாஹ்விற்கே புகழனைத்தும் என்றும் சொல்லப்படும். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 8)

**ஸூரா - 40, அல்முஃமின்; வசனம்: 1 - 27; பிரிவு: 1 - 3**

8. அர்ஷைச் சுமந்துகொண்டிருக்கும் வானவர்களும் அதனைச் சுற்றி இருக்கும் வானவர்களும் சுமந்தவண்ணம், தங்களுடைய இறைவனைப் புகழ்ந்து துதி பாடுகிறார்கள். அவர்கள் அல்லாஹ்வை ஈமான் கொண்டிருக்கிறார்கள்; ஈமான் கொண்ட மற்றவர்களுக்காக மன்னிப்புக் கோருகின்றனர். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 1)

9. “எங்கள் இறைவா! உனது கருணையும், அறிவும் எல்லாப் பொருட்களிலும் விரிந்துள்ளன. எனவே, பாவமன்னிப்பு கோரி, உன் வழியைப் பின்பற்றுபவர்களுக்கு நீ மன்னிப்பு

அளிப்பாயாக!; அவர்களை நரக வேதனையிலிருந்து காத்தருள்வாயாக!" (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 1)

10. மறுமையில் இறைமறுப்பாளர்களை அழைத்துக் கூறப்படும்: "ஈமான் கொள்ளுமாறு உங்களுக்கு (உலகில்) அழைப்பு விடப்பட்டபோது நீங்கள் மறுத்தீர்கள். அப்போது அல்லாஹ் உங்கள்மீது கொண்ட கோபமானது இப்போது உங்கள்மீதே உங்களுக்கு ஏற்படும் கோபத்தைவிட மிகவும் பெரிதாகும். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 2)

11. "இறைவா! எங்களை இரண்டு முறை மரணிக்கச் செய்தாய். இரண்டு முறை எங்களுக்கு உயிர் கொடுத்தாய். இப்போது நாங்கள், எங்களது குற்றங்களை ஒப்புக் கொண்டு விட்டோம். எனவே நரகத்தை விட்டு நாங்கள் வெளியேற எங்களுக்கு ஏதேனும் வழி உண்டா?" என காஃபிர்கள் கேட்பார்கள். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 2)

12. உங்களின் இந்நிலைக்குக் காரணம், "அல்லாஹ் ஒருவனையே நம்புமாறு அழைக்கப்பட்டபோது நீங்கள் நிராகரித்தீர்கள். ஆனால், அவனுக்கு இணைவைக்கப்பட்ட போது நம்பிக்கை கொண்டீர்கள்". (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 2)

13. "ஆகவே இன்று தீர்ப்பளிக்கும் அதிகாரம், மிக்க மேலானவனும், மகாப் பெரியவனுமான அல்லாஹ்வுக்கே உரியது". (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 2)

14. கியாமத் நாளில், "இன்றைய தினம் ஆட்சி, அதிகாரம் முழுக்க யாருக்குச் சொந்தம்?" என்று கேட்கப்படும். அப்போது எவருக்கும் பேச தைரியம் இருக்காது. அப்போது அல்லாஹ்வே பதில் சொல்வான்: "அடக்கி ஆளும் ஏகனான அல்லாஹ்விற்கே சொந்தம்". (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 2)

15. இன்று, ஒவ்வோர் மனிதனுக்கும், அவன் சம்பாதித்ததற்குக் கூலி கொடுக்கப்படும். இன்று அநீதி என்பதே கிடையாது. நிச்சயமாக, அல்லாஹ் கணக்குத் தீர்ப்பதில் விரைவானவன். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 2)

16. அல்லாஹ் மூஸா (அலை) அவர்களை அற்புதங்களுடனும், தெளிவான ஆதாரங்களுடனும் ஃபிர்அவ்ன், ஹாமான், காரூண் ஆகியோரிடம் அனுப்பினான். அவர்கள் மூஸா (அலை) அவர்களை பொய்யர் என்றும், சூனியக்காரர் என்றும் அழைத்தனர். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 3)

17. மூஸா (அலை) அவர்கள், அல்லாஹ்விடமிருந்து சத்தியத்தை அவர்களிடம் கொண்டு சென்ற போது "அவருடன் ஈமான் கொண்ட ஆண்களைக் கொன்றிடுங்கள், பெண்களை விட்டு விடுங்கள்", என்று அவர்கள் கூறினர். காஃபிர்களின் சூழ்ச்சியானது நிச்சயம் வழி கேட்டில்தான் முடியும். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 3)

18. ஃபிர்அவ்ன் தன் அவையோரிடம், "என்னை விடுங்கள். நான் மூஸாவை கொலை செய்துவிடுகிறேன்! அவர் தம்முடைய இறைவனை அழைக்கட்டும். நிச்சயமாக அவர் உங்கள் மார்க்கத்தை மாற்றிவிடுவார் அல்லது இப்பூமியில் குழப்பத்தை உருவாக்கிவிடுவார் என நான் அஞ்சுகிறேன்" என்று கூறினான். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 3)

19. அதற்கு மூஸா (அலை) கூறினார்கள்: "விசாரணை நாள்மீது நம்பிக்கை கொள்ளாதவர்கள், பெருமையடிப்போர் ஆகியோருடைய (தீங்கிற்கு) எதிராக, அல்லாஹ்விடம் நான் பாதுகாவல் தேடுகிறேன். அவனே என்னுடைய இறைவன்; அவனே உங்களுடைய இறைவனாகவும் இருக்கிறான்". (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 3)

## ஒரு பார்வை - பகுதி 3

**மூஸா (அலை) அவர்களுக்கு ஆதரவாக ஃபிர்அவ்னின் உறவினர்களில் ஒருவர் பேசியதைக் கேட்ட ஃபிர்அவ்ன், மூஸா (அலை) கடவுளைப் பார்க்க ஒரு உயரமான கோபுரத்தைக் கட்டும்படி ஹாமானிடம் கேட்கிறான். மூஸா (அலை) அவர்களுக்கு ஆதரவாக பேசிய ஃபிர்அவ்னின் உறவினரை அல்லாஹ் காப்பாற்றினான். ஃபிர்அவ்னின் மக்களை அழித்தான். அவர்கள் தினமும் காலையிலும், மாலையிலும் நரக நெருப்பின் முன் ஆஜர் படுத்தப்படுகிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்: "என்னை அழையுங்கள்; உங்கள் பிரார்த்தனைகளுக்கு நான் பதிலளிப்பேன்".**

## தராவிஹ் - 20: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 40, அல்முஃமின்; வசனம்: 28 - 68; பிரிவு: 4 - 7

1. **ஃபிர்அவ்னுடைய குடும்பத்திலுள்ள ஓர் இறைநம்பிக்கையாளர் தன் ஈமானை மறைத்து வைத்திருந்தார். அவர், "என்னுடைய இறைவன், அல்லாஹ்" என்று சொன்னார். இதற்காவா ஒருவரை நீங்கள் கொல்லப் போகிறீர்கள்?" என்று கேட்டார். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 4)**

2. **மேலும் அந்த முஃமினான மனிதர், "என் சமூகத்தாரே! நூஹ், ஆத், ஸமூத் மற்றும் அவர்களுக்குப் பின்னால் வாழ்ந்த சமூகத்தாருக்கு வந்த சோதனை நாள் உங்களுக்கும் வந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்" என்று எச்சரித்தார். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 4)**
3. **இதனைக் கேட்ட பிறகு ஃபிர்அவ்ன் ஹாமானிடம், "ஹாமானே! ஓர் உயர்ந்த கோபுரத்தை நீ கட்டு. நான் வானங்களின் வழிகளை அடைந்து, மூஸாவுடைய இறைவனைப் பார்க்க வேண்டும். மேலும் மூஸாவைப் பொய்யரென்றே நான் கருதுகிறேன்" என்று கூறினான். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 4)**

4. இவ்வாறே ஃபிர்அவ்னுக்கு அவனுடைய தீய செயல்கள் அழகாகக் காட்டப்பட்டன. அவன் நேர் வழியிலிருந்து தடுக்கப்பட்டான். அவனுடைய சதி அவனுக்கே அழிவாக முடிந்தது. (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 4)

5. அந்த முஃமினான மனிதர் தொடர்ந்து கூறினார், “என் சமூகத்தாரே! என்னைப் பின்பற்றுங்கள். உங்களுக்கு நான் நேரான பாதையைக் காட்டுகின்றேன். என்ன இது? நான் உங்களை வெற்றியின் பக்கம் அழைக்கின்றேன், நீங்கள் என்னை நரகத்தின்பால் அழைக்கின்றீர்கள்". (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 5)

6. மேலும் அவர், "நான் உங்களுக்குச் சொல்வதை நீங்கள் விரைவில் உணர்வீர்கள். மேலும், நான் என் காரியத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுகிறேன். நிச்சயமாக அல்லாஹ் அடியார்களை உற்று நோக்குபவனாக இருக்கின்றான்", என்றும் கூறினார். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 5)

7. அம்மக்கள் திட்டமிட்ட தீங்குகளில் இருந்து அல்லாஹ், அந்த முஃமினான மனிதரைக் காப்பாற்றினான். ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை வேதனையின் கேடு சூழ்ந்து கொண்டது. (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 5)

8. காலையிலும் மாலையிலும் அவர்கள் நரக நெருப்பில் ஆஜர் படுத்தப்படுவார்கள் (அவர்கள் இறந்ததிலிருந்து கியாமத் நாள் வரைக்கும்). கியாமத் நாள் நிகழும்போது, “ஃபிர்அவ்னையும் அவனது கூட்டத்தாரையும் கடும் வேதனையில் புகுத்துங்கள்” என்று மலக்குகளுக்கு கட்டளையிடப்படும். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 5)

9. நரகவாசிகள் அதன் காவலாளியிடம், "ஒரே ஒரு நாள் வேதனையை தளர்த்தும்படி உங்களுடைய இறைவனிடம் சொல்லுங்கள்" என அவர்கள் கூறுவதை நினைத்துப் பாருங்கள். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 5)

10. நரகத்தின் காவலாளிகள், “உங்களுடைய தூதர், உங்களிடம் தெளிவான ஆதாரங்களைக் கொண்டு வரவில்லையா?” என்று கேட்பார்கள், அதற்கு அவர்கள், “ஆம்” என்று சொல்வார்கள். அப்படியானால் “நீங்களே அல்லாஹ்வை வேண்டிக்கொள்ளுங்கள்” என்று பதில் கூறுவர். காஃபிர்களின் வேண்டுதல் நிறைவேறாது. (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 5)

11. “என்னை அழையுங்கள், உங்களுக்கு நான் பதிலளிக்கிறேன்” என்று உங்கள் இறைவன் கூறுகிறான். யார் என்னை வணங்காமல் பெருமையடிக்கிறார்களோ, நிச்சயமாக அவர்கள் இழிவடைந்து நரகில் நுழைவார்கள். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 6)

## ஒரு பார்வை - பகுதி 4

**யார் அல்லாஹ்வினுடைய வசனங்களை பொய்யெனக் கூறி வாதிடுகிறார்களோ, அவர்களின் கழுத்துக்களில் இரும்பு வளையங்களும், கால்களில் சங்கிலிகளும் பிணைக்கப்படும். கடுமையாக கொதிக்கும் நீருக்குள் இழுத்து வரப்பட்டு நரக நெருப்பில் கரிக்கப்படுவார்கள். பூமி, மலைகள், வானங்கள் மற்றும் சொர்க்கம் ஆகியவற்றின் படைப்புகள் விளக்கப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 20: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 40, அல்முஃமின்; வசனம்: 69 - 85; பிரிவு: 8 - 9

1. **யார் அல்லாஹ்வினுடைய வசனங்களை பொய்யெனக் கூறி வாதிடுகிறார்களோ, அவர்கள் விரைவிலேயே (நரக நெருப்பில் இருக்கும்போது) உண்மையை அறிவார்கள். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 8)**

2. **அவர்களின் கழுத்துக்களில் இரும்பு வளையங்களும், கால்களில் சங்கிலிகளும் பிணைக்கப்படும். கடுமையாக கொதிக்கும் நீருக்குள் இழுத்து வரப்பட்டு, நரக நெருப்பில் கரிக்கப்படுவார்கள். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 8)**

3. **“இந்த நிலைக்கு நீங்கள் ஆளானதற்குக் காரணம், நீங்கள் பூமியில் நியாயமின்றி செருக்கோடும், ஆணவத்தோடும் நடந்து கொண்டருந்ததுதான். இப்போது நரக வாசல்களுக்குள் நுழைந்து, அதிலேயே நிரந்தரமாக தங்கி விடுங்கள்”, என்று அவர்களுக்கு சொல்லப்படும். (ஸூரா - அல்முஃமின்; பிரிவு: 8)**

**ஸூரா - 41, ஹா மீம் ஸஜ்தா; வசனம்: 1 - 18; பிரிவு: 1 - 2**

4. ஹா, மீம்! இந்த வேதம் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனிடமிருந்து இறக்கி அருளப்பட்டது. (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 1)

5. நபியே! அவர்களிடம், "இந்த பூமியை இரண்டே நாட்களில் படைத்தவனை நீங்கள் ஏற்க மறுக்கிறீர்களா?" என்று கேளுங்கள். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 2)

6. அவனே பூமியின் மேலே உறுதியான மலைகளை நியமித்து அதிலே வளங்களை அருளினான். மேலும் பூமியில் உள்ளவர்களுக்கான உணவுகளை நிர்ணயம் செய்தான். (இவை எல்லாம் நான்கு நாட்களில் நடந்தன. பூமியை உருவாக்கிய இரண்டு நாட்களும் இதில் அடங்கும்). (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 2)

7. பிறகு வானத்தை அல்லாஹ் கவனித்தான். அது புகைமண்டலமாக இருந்தது. அவன், வானத்திடமும், பூமியிடமும் "நீங்கள் விரும்பியோ, விரும்பாமலோ என் ஆணைக்கு அடிபணிந்து வாருங்கள்" எனக் கூறினான். அதற்கு அவை இரண்டும், "இதோ, விரும்பியே வந்து விட்டோம்" என்றன. (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 2)

8. இவற்றைப் படைக்கின்ற சமயம், அல்லாஹ் இரண்டு நாட்களில் ஏழு வானங்களை அமைத்தான். (இவ்வாறாக மொத்தம் ஆறு நாட்களாகியது). மேலும் ஒவ்வொரு வானுக்கும் அதனதன் வேலைகளை கட்டளைகளாக அறிவிப்பு செய்தான். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 2)

9. (பூமிக்கு சமீபமாக இருக்கின்ற) முதல் வானத்தை அல்லாஹ் விளக்குகளால் (நட்சத்திரங்களால்) அலங்கரித்து, அதை பாதுகாப்பானதாக ஆக்கினான். இது எல்லாவற்றையும்

அறிந்த, வல்லமையுடையோனின் ஏற்பாடாகும். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 5

நியாயத்தீர்ப்பு நாளில், மனிதனின் காதுகள், கண்கள் மற்றும் தோல் ஆகியவை அவனது தவறான செயல்களுக்கு எதிராக சாட்சி கூறும். நரகம் தான் அல்லாஹ்வுடைய பகைவர்களுக்குள்ள கூலியாகும். அதே நேரத்தில் விசுவாசிகள் சொர்க்கத்தில் மகிழ்ச்சியான நிலையில் இருப்பார்கள். மனிதர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்து, நற்செயல்கள் செய்து, தான் முஸ்லீம் என்று கூறுவதே அழகிய சொல்லாகும்.

## தராவிஹ் - 20: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 41, ஹாமீம் ஸஜ்தா; வசனம்: 19 - 46; பிரிவு: 3 - 6

1. அல்லாஹ்வின் விரோதிகளை நரகத்தின்பால் ஒன்று சேர்க்கப்படும் அந்த நாளை நினைத்துப் பாருங்கள். அவர்கள் அணிவகுத்து நிறுத்தப்படுவார்கள். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 3)

2. அங்கே அவர்களுடைய கண், காது, தோல்கள் அனைத்தும் அவர்கள் செய்தவற்றைப் பற்றி அவர்களுக்கு எதிராக சாட்சி சொல்லும். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 3)

3. “எங்களுக்கெதிராக ஏன் நீங்கள் சாட்சியம் அளிக்கின்றீர்கள்?” என்று அவைகளிடம் அவர்கள் கேட்பார்கள். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 3)

4. “ஒவ்வொரு பொருளையும் பேச வைத்த அல்லாஹ்தான் எங்களையும் பேச வைத்தான். அவன்தான் உங்களை முதல் தடவையும் படைத்தான். மேலும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்", என்று அவைகள் பதில் கூறும். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 3)

5. “உங்கள் காதுகளும், உங்கள் கண்களும், உங்கள் தோல்களும், உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லாமலிருக்கும் பொருட்டு, பூமியில் உங்கள் பாவங்களை நீங்கள் மறைத்துக் கொள்ளவில்லை". (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 3)

6. "ஆகவே, உங்கள் இறைவனைப் பற்றி நீங்கள் எண்ணிய உங்களுடைய தவறான இந்த எண்ணம்தான் உங்களை அழித்து விட்டது. ஆகவே நீங்கள் நஷ்டமடைந்தவர்களாக ஆகிவிட்டீர்கள்". (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 3)

7. நரகம்தான் அல்லாஹ்வுடைய பகைவர்களுக்குள்ள கூலியாகும். நம் வசனங்களை அவர்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததன் கூலியாக அவர்களுக்கு நிரந்தரமான வீடு அந்நரகத்தில் உண்டு. (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 4)

8. ஏக இறையை மறுத்தோர், “எங்கள் இறைவா! எங்களை தவறான வழியில் நடத்திய ஜின் மற்றும், மனிதர் ஆகிய இரு இனத்தவரையும் எங்களுக்கு அடையாளம் காட்டுவாயாக! அவர்களை கீழ்த்தரமானவர்களாக ஆக்கவேண்டும் என்பதற்காக அவர்களை எங்களுடைய கால்களுக்கு கீழே போட்டு மிதித்து விடுகின்றோம்”, என்று கூறுவார்கள். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 4)

9. ஈமான் கொண்டவர்களிடம், (அவர்கள் இறக்கும் வேளையில்) வானவர்கள் வந்து, “நீங்கள் பயப்படவேண்டாம்; கவலை கொள்ள வேண்டாம். மாறாக உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கம் உங்களுக்கு உண்டு” என சுபச்செய்தி கூறுவார்கள். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 4)

10. அல்லாஹ்வை நோக்கி வருமாறு அழைப்பு விடுத்து, நற்செயல் செய்து “நிச்சயமாக நான் அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டவர்களில் ஒருவன்” என்று சொன்னவரைவிட

அழகிய சொல்லைச் சொன்னவர் வேறு யார்?" (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 5)

11. நற்செயல்களைக் கொண்டே தீயவற்றைத் தடுப்பீராக! அப்போது உமக்கும் யாருக்கும் இடையில் பகைமை உள்ளதோ, அவர் உற்ற நண்பரைப் போலாகி விடுவார். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 5)

12. ஆனால், பொறுமையாக இருப்பவர்களைத் தவிர வேறு யாரும் இந்த பாக்கியத்தை அடைய முடியாது. மகத்தான நற்பாக்கியம் உள்ளவர்களைத் தவிர வேறு யாரும் இதனை அடைந்துகொள்ள மாட்டார்கள். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 5)

13. எப்போது ஷைத்தான் உங்களை தீண்டினாலும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ்தான் செவியேற்பவனும், நன்கு அறிந்தவனுமாக இருக்கின்றான். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 5)

14. இரவும், பகலும், சூரியனும், சந்திரனும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவைதாம். ஆகவே, நீங்கள் உண்மையாகவே அவனை வணங்குவதாக இருந்தால் சூரியனுக்கும், சந்திரனுக்கும் ஸுஜூது செய்யாதீர்கள். அவைகளை படைத்த அந்த அல்லாஹ்விற்கே ஸஜ்தா செய்திடுங்கள். (ஸஜ்தா - 12) (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 5)

15. இந்த குர்ஆன், முஃமின்களுக்கு நேர்வழியும், நிவாரணமும் ஆகும். யார் இறைநம்பிக்கை கொள்ளமாட்டார்களோ, அவர்களின் செவிகளில் அடைப்பு உள்ளது. அவர்களின் கண்களுக்கு அவை மறைந்ததாக இருக்கும். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 5)

---